**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 147 of 2023**

**Prosecution Witness : PW10**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திரு. பிரபு | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused  absent. u/s 317 Crpc petition filed and allowed)**

**Dated.16.07.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாவட்டம் ராம்ஜி நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது இலால்குடி காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 01.06.2023ம் தேதி நிலைய குற்ற 262/2023 இதச பிரிவுகள் 279, 337, 304(A)யின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு முதல் விசாரணை முடிக்க பட்டு மேல் விசாரணைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். உதவி ஆய்வாளர் புனிதவள்ளி தயார் செய்த மாதிரி வரைபடத்துடன் சம்பவ இடம் ஒத்திருந்ததால் நான் தனியாக மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை. உதவி ஆய்வாளர் புனிதவள்ளி விசாரணை செய்த சாட்சிகளை நான் விசாரணை செய்ததில் அவரிடம் சொன்ன அதே வாக்குமூலத்தை என்னிடம் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் விபத்தில் சம்மந்தப்பட்ட

வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் முகமது மீரா என்பவருக்கு அனுப்பி வைத்து வாக்குமூலம் பதிவு செய்து தணிக்கை சான்று பெற்றேன். TN 46 T 5445 என்ற வாகனத்திற்கு வழங்கப்பட்ட வாகன தணிக்கை சான்று **அ.சா.ஆ.5/அ.சா.10** ஆகும். TN 48 BX 4308 என்ற வாகனத்திற்கு வழங்கப்பட்ட வாகன தணிக்கை சான்று **அ.சா.ஆ.6/அ.சா.10** ஆகும். இவ்வழக்கில் இறந்துபோன ஜான் பிரான்சிஸ் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் பாலசுப்பிரமணியன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். ஜான் பிரான்சிஸ் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.7/அ.சா.5** ஆகும். பட்டியல் சாட்சியான 13, 14 யை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கடந்த 17.06.2023 அன்று தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

உதவி ஆய்வாளர் அவருடைய விசாரணை முடித்து எந்த தேதியில் என்னிடம் வழக்கு கோப்பை கொடுத்தார் என்றால் 17.06.2023 அன்று கொடுத்தார். இறுதி அறிக்கையில் விபத்து நடந்தது எவ்வாறு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இவ்வழக்கின் எதிரியானவர் முன்னால் சென்ற வாகனத்தை முந்துவதற்காக கவனக்குறைவாக வாகனத்தை வலது புறமாக திருப்பும் போது எதிர் திசையில் சாலையின் ஓரமாக வந்த இறந்து போன ஜான் பிரான்சிஸ் ஓட்டி வந்த இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. நான் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில்

சம்பவத்தன்று காலை 8.30 மணியளவில் டோல்கேட் to லால்குடி ரோடு வாளாடி பத்மாவதி பேலஸ் திருமண மண்டபவம் அருகில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ரோட்டின் இடது புற ஓரமாக புகார்தாரரின் கணவர் வந்து கொண்டிருந்த போது அதே ரோட்டில் எதிர் திசையில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த TN 46 T 5445 என்ற பதிவு எண் கொண்ட அம்மன் தனியார் பேருந்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உதவி ஆயவாளர் விசாரணை செய்த சாட்சிகளை நான் விசாரணை செய்து மறு வாக்குமூலம் பெற்றேனா என்றால் விசாரணை செய்தேன். உதவி ஆய்வாளரிடம் சொன்ன அதே வாக்கு மூலத்தை என்னிடம் சொன்னதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பட்டியல் சாட்சி 2 உதவி ஆய்வாளர் விசாரணையில் இறந்து போன ஜான் பிரான்சிஸ் வாளாடி பத்மாவதி பேலஸ் திருமண மண்டபம் அருகில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி அவரது இருச்சக்கர வாகனத்தில் வந்தார் என்றால் சரிதான். அப்போது அவருக்கு எதிரில் திருச்சி நோக்கி சென்ற TN 46 T 5445 என்ற எண்ணுள்ள தனியார் பேருந்து என பட்டியல் சாட்சி 2 அவருடைய போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 2 சாட்சியத்தின் படி பேருந்தானது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்துள்ளது என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி 2 போலீசார் விசாரணையில் இறந்து போன ஜான் பிரான்சிஸ் திருச்சி to லால்குடி சாலையில் வந்ததாக சொல்லியுள்ளார் ஆனால் திசையை மாற்றி சொல்லி வாக்குமூலம் அளித்துளளார். பத்மாவதி பேலஸ் திருமண மண்டபத்திற்கு எதிரே நிழற்குடை உள்ளது என்றால் இல்லை. பத்மாவதி பேலஸ் திருமண மண்டபத்திற்கு எதிரே நிழற்குடை உள்ளது என்றாலும் நான் சம்பவ இடத்திற்கு செல்லாத காரணத்தினால் தான் அது குறித்து தெரியவில்லை

என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், உதவி ஆய்வாளர் பதிவு செய்த தவறுதலான முதல் தகவல் அறிக்கையை சரிவர பரிசீலனை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்து போன ஜான் பிரான்சிஸ் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்து நிழற்குடை அருகில் நின்று கொண்டிருந்த பேருந்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து இயந்திரத்தனமாக தயார் செய்தது என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.07.16 12:44:24 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி